# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/4 - 2020 ජුනි මස 22 වැනි සඳුදා - 2020.06.22

2181/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 6/3/7/15/11/15.

காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/117j.

மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், நாவுல பிரதேச செயலாளர் பிரிவில், கங்கல பல்லேசிய பத்துவில் எலகமுவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 2018.01.29 ஆந் திகதிய பி. ஆ. வரைபட இலக்கம் 18, குறைநிரப்பி 29, பத்திர இலக்கம் 62 இல் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகள்.

**01. துண்டு இல. 2936**

காணியின் பெயர்: அம்பகஹதெவொலஹேனே யாய; விபரம்: வனம்; உரிமை கோருபவர்: அரசு (வன பாதுகாப்புத் திணைக்களம்); பயனடைவோர்: இல. 14, குலுகம்மன, கண்டியில் வதியும் திரு. ஹீன்பண்டா குலுகம்மன மற்றும் ஜாஎல வீதி, கிரிந்திவிட்ட, கம்பஹவில் வதியும் வத்தேகெதர துக்கன்னாராலலாகே ஏக்கநாயக்க பண்டார; விஸ்தீரணம்: 13.8891 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 2937**

காணியின் பெயர்: அம்பகஹதெவொலஹேனே யாய; விபரம்: வனம்; உரிமை கோருபவர்: அரசு (வன பாதுகாப்புத் திணைக்களம்); பயனடைவோர்:



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இல. 14, குலுகம்மன, கண்டியில் வதியும் திரு. ஹீன்பண்டா குலுகம்மன மற்றும் ஜாஎல வீதி, கிரிந்திவிட்ட, கம்பஹவில் வதியும் திரு. வத்தேகெதர துக்கன்னாராலலாகே ஏக்கநாயக்க பண்டார; விஸ்தீரணம்: 21.3617 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி மு.ப. 09.00 மணிக்கு நாவுல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2020, யூன் 17.

07 - 211